பக்கங்கள் 22 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 09 சனிக்கிழமை 21.02.2026 | அதிர்வு 204

## மாமனாரின் கத்திக்குத்தில் மருமகன் பலி!




05

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





### மாத்தறையில் பட்டப்பகலில் பயங்கரம்

# மீன் வியாபாரி சுட்டுக்கொலை!

## காரில் வந்த கும்பல் சரமாரித் தாக்குதல்; பாதாள உலக மோதலா என விசாரணை

மாத்தறை, கந்தர பகுதியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 55 வயதுடைய நபர் ஒருவர் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கந்தர பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் குழுவொன்று, அங்கிருந்த நபர் மீது 9 மில்லிமீற்றர் ரகத் துப்பாக்கியால் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

05

## மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிக்க வேண்டாம்; தெரிவுக்குழு என்பது காலத்தைக் கடத்தும் தந்திரம்!



### முன்னாள் அமைச்சர் ஹரின் சாடல்

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு, விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக அரசு மேலும் காலத்தை இழுத்தடிக்கக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் உபசெயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்தினார்.

அரசு தேர்தலைத் தாமதப்படுத்தாமல், இவ்வருடத்துக்குள் அதனை விரைந்து நடத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

05




# கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் இராமச்சந்திரன் எங்கே?

## அரசிடம் பதில் கேட்டு பருத்தித்துறையில் கவனவீர்ப்புப் போராட்டம்!

இராணுவத்தினாரால் கைது செய்யப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட, வடமராட்சி – கரவெட்டியை சேர்ந்த ஊடகவியலாளரும் ஆசிரியருமான சுப்பிரமணியம் இராமச்சந்திரன் எங்கே? அநுர அரசே பதில் சொல் என வலியுறுத்தி யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் சு.இராமச்சந்திரன் வீடு திரும்பிய போது துன்னாலை கலிகை சந்தியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் வைத்து கடந்த 15.02.2007 அன்று இராணுவத்தினர் மற்றும் ஈ.பி.டி.பியினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. அதன் 19 ஆவது ஆண்டை முன்னிட்டு அவர் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் நீதி கேட்டு யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் முக்கிய செயற்பாட்டாளரும் மூத்த ஊடகவியலாளருமான மு.மதிவாணன் தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. இதன்போது ஊடகவியலாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவுகள், பி2பி மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவரும், சிவகுரு ஆதீன குரு முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள், பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல், வல்வெட்டித்துறை நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கம், கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் தயாபரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், குரலற்றவர்களின் குரல், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியினர் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.










### மனித உரிமைகள் மற்றும் நிலையான அபிவிருத்தி:

# ஐ.நாவுடன் ஆக்கபூர்வமாக இணைய இலங்கை தயார்!

## மார்க் ஆண்ட்ரேவிடம் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் திரு. மார்க் – ஆண்ட்ரே பிரான்ச், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவை நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கைக்கும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கும் இடையிலான தற்போதைய ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.



குறிப்பாக பின்வரும் முக்கிய விடயங்கள் கலந்துரையாடலில் இடம் பெற்றன.

✮ நாட்டின் முன்னுரிமைக்குரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை எட்டுதல்.

✮ தற்போதைய பொருளாதார சவால்களை முறியடிப்பதற்கான முயற்சிகள் மற்றும் அதற்குரிய ஒத்துழைப்புகள்.

✮ அரச நிறுவனங்களின் வினைத் திறனை மேம்படுத்துதல்.

✮ மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான விடயங்கள்.

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கைப் பேணுவதில் இலங்கையின் அர்ப்பணிப்பைப் பிரதி அமைச்சர் இதன்போது மீண்டும் உறுதிப்படுத்தினார். பன்முகத்தன்மை கொண்ட சர்வதேச கட்டமைப்பிற்குள் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்பட இலங்கை தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளுடனான நீண்டகால பங்காளித்துவத்தை இலங்கை உயர்வாக மதிக்கின்றது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, மீளெழும் திறன் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கிய பயணத்தில் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் இச்சந்திப்பின் முடிவில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கூறினார்.







# மீண்டும் ஓர் இருண்ட காலம் உருவாக இடமளிக்காதீர்கள்!

## மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு கோடீஸ்வரன் எம்.பி. கடும் எதிர்ப்பு

இலங்கையில் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் நிலவியது போன்ற மின்சாரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமை மீண்டும் ஒருபோதும் ஏற்படக்கூடாது எனவும், இது தொடர்பில் அரசு முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'வலுசக்தி துறையில் காணப்படும் பிரச்சினைகள்' தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

"நடப்பு ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மின்சாரக் கட்டணத்தை 13.8 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் பரிந்துரை செய்துள்ளது. இவ்வாறான மேலதிக சுமை அடிமட்ட மக்கள் மீதே சுமத்தப்படும். இதனால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. கடந்த காலப் பொருளாதார நெருக்கடிகளால் நாடு பாரிய பின்னடைவைச் சந்தித்தது. அத்தகையதொரு இருண்ட காலம் மீண்டும் உருவாக அரசு இடமளிக்கக்கூடாது.

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையால் மின்சார சபைக்கு 5 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதிகாரிகளின் இவ்வாறான தவறுகளால் ஏற்படும் நட்டத்தை ஏழை மக்கள் தலையில் சுமத்துவது நியாயமற்றது. எனவே, நிலக்கரி இறக்குமதியின் போது முறையான மற்றும் வெளிப்படையான பொறிமுறையைப் பின்பற்றுவது அவசியமாகும்.

தற்போது பெய்து வரும் மழையினால் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக, அறுவடை செய்த நெல்லை உலர்த்த முடியாமல் விற்பனை செய்ய முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். எனவே, விவசாயிகளின் நலன் கருதி பிரதேச ரீதியாக நெல் உலர்த்தும் இயந்திரங்களை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், தமது சொத்துக்களை அடகு வைத்தும் விற்றும் விவசாயம் செய்யும் இவர்களுக்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதோடு, நெல் உலர்த்தும் இயந்திரங்களுக்கான மின்சாரத்தை மானிய அடிப்படையில் வழங்கவும் அரசாங்கம் முன்வர வேண்டும்." - என்றார்.

# ஹெரோயின், மின்னனு தராசுடன் போதைப்பொருள் வியாபாரி கைது!

## பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதிரடி

களுத்துறை, பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலான பகுதியில், ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் குழுவினரால் நேற்று இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 103 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், ஒரு மின்னனு தராசு மற்றும் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.



போதைப்பொருள் வியாபாரியான மேற்படி சந்தேகநபர் பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வலான பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடும்பத் தகராறு கொலையில் முடிந்தது! மாமனாரின் கத்திக்குத்தில் மருமகன் பலி!!

## மனைவி வெளிநாட்டில் இருக்கையில் நேர்ந்த சோகம்




கேகாலை மாவட்டம், தெரணியகலை – மாலிபொட தேயிலைத் தொழிற்சாலைப் பிரிவில் இடம்பெற்ற குடும்பத் தகராறின் விளைவாக, மாமனாரின் கத்திக்குத்துக்கு இலக்காகி மருமகன் உயிரிழந்துள்ளார்.

மாலிபொட பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபருக்கும் அவரது மாமனாருக்கும் இடையில் நேற்று மாலை ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த மாமனார் மருமகனைக் கத்தியால் குத்தியுள்ளார்.

படுகாயமடைந்த நபர் உடனடியாக தெரணியகலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றார் என்று தெரியவருகின்றது.

குடும்பத் தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தின் பின்னர் சந்தேகநபரான மாமனார் அப்பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தலைமறைவாகியுள்ள அவரைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகளை தெரணியகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்கிஸையில் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொய்சாபுர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது, ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.



கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன், போதைப் பொருள் விற்பனை மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 44 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

“மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு புதிய முறைமையா அல்லது பழைய முறைமையா என்பது குறித்துத் தெரிவுக்குழுவை அமைத்து விவாதிப்பது தேவையற்ற காலதாமதத்தையே ஏற்படுத்தும். இவ்வாறான பொறிமுறையின் ஊடாகத் தேர்தலை மேலும் தள்ளிப்போட அரசு முயற்சிப்பதாகவே மக்கள் கருதுகின்றனர்.

மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், நிலுவையிலுள்ள மாகாண சபைத் தேர்தலை இவ்வருடமே நடத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கான சட்டச் சிக்கல்கள் இருப்பின், அவற்றை விரைவாகத் தீர்த்துத் தேர்த லுக்கான சூழலை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.” – என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## மீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் உடனடியாக மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கந்தர பகுதியைச் சேர்ந்த ‘டிலைட்’ என அழைக்கப்படும் 55 வயதுடைய மீன் வியாபாரியே உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதலானது தனிப்பட்ட பகையினால் இடம்பெற்றதா அல்லது பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதலா என்ற கோணத்தில் கந்தர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ இடத்தைச் சூழவுள்ள சி.சி.ரி.வி. காட்சிகளை ஆய்வு செய்துவரும் பொலிஸார், தப்பிச் சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்ய விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.





# வடக்கு மாகாண அபிவிருத்தியில் இந்தியாவின் பாரிய பாய்ச்சல்!

## கடன்களை நன்கொடைகளாக மாற்றி ஆளுநருடன் பிரதி உயர்ஸ்தானிகர் யாழில் நேற்று விரிவான பேச்சு

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அதற்காக இந்திய அரசுக்கும் மக்களுக்கும் வடக்கு மாகாண மக்கள் சார்பில் ஆளுநர் நா.வேதநாயகன் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி ஆகியோர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது, இந்திய அரசின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளின் அபிவிருத்தி மற்றும் காரைநகர் படகுக் தள அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆளுநருடன் பிரதி உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார்.

அண்மையில் ஏற்பட்ட டித்வா பேரிடரின் பின்னரான உதவித் திட்டங்கள் குறித்தும், இந்தியாவின் 'அயலவருக்கு முன்னுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையிலான முன்னுரிமைகள் தொடர்பிலும் பிரதி உயர்ஸ்தானிகர் ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினார். அத்துடன், கடன்களாக வழங்கப்பட்ட சில உதவித் திட்டங்கள் தற்போது நன்கொடைகளாக மாற்றப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டித்வா பேரிடரின்போது இந்திய அரசு வழங்கிய உடனடி உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், இந்தியாவின் தொடர்ச்சியான பங்களிப்புக்களைப் பாராட்டினார். இந்திய அரசின் நன்கொடையின் கீழ் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை தொடர்பிலும், துறைசார் அமைச்சர் நேற்றுமுன்தினம் இது குறித்து வெளியிட்ட கருத்துக்களையும் ஆளுநர் இதன்போது நினைவுகூர்ந்தார்.

பலாலி விமான நிலையத்தின் முனையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கை அரசு விசேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில், எதிர்காலத்தில் அதன் ஏனைய விரிவாக்கச் செயற்பாடுகளுக்காக இலங்கை அரசு விடுக்கும் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலை வழங்குவதற்கு இந்திய அரசு தயாராக இருப்பதாகவும் பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இந்திய முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த பிரதி உயர்ஸ்தானிகர், முதலீட்டு வலயங்கள் தொடர்பான கொள்கை நிலைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர், இந்திய முதலீட்டாளர்களை நிச்சயம் வடக்கில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க முடியும் என உறுதியளித்தார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## டிரம்பின் திருவிழா!

தமது இரண்டாவது பதவிக் காலத்தில் உலக அரசியலில் பெரும் சண்டப்பிரசண்டங்களைப் பண்ணிக் கொண்டிருக்கின்றார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்.

பொருளாதார வரி விதிப்பு, தடைகள், படை நடவடிக்கைகள் என்று அவர் பண்ணும் அடாவடித்தனங்களினால் சர்வதேசங்களும் மூன்றாம் உலகப்போரின் விளிம்புக்கு சென்றிருக்கின்றமை பலரையும் பதற வைத்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில்தான் அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் அதிபர் டிரம்பின் அத்துமீறல்களுக்கு ஒரு குட்டு வைத்திருக்கின்றது.

உலக நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் சட்டவிரோதமான முறையில் வரி அறவீடு செய்துள்ளார் என அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

டிரம்ப் விதித்து வரும் சுங்க வரிகள் கூட்டாட்சிச் சட்டத்தை மீறுகின்றன என அமெரிக்க உச்ச நீதிமன்றம்நேற்றுவெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

ஒன்பது பேர்கொண்ட நீதியரசர் குழாமில் 6 பேர் டொனால்ட் டிரம்ப்பின் வரி விதிப்பு சட்டவிரோதமானது எனத் தீர்மானித்தன் பிரகாரம் இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

1977ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் கீழ் டிரம்ப் விதித்த பெரும்பாலான அவசர சுங்க வரிகளுக்கு சட்டபூர்வ ஆதாரம் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அளவில்லாத, காலவரையற்ற, பரந்த அளவிலான சுங்க வரிகளை ஒருதலைப்பட்சமாக விதிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது எனவும், அதற்கு காங்கிரஸின் தெளிவான அனுமதி அவசியம் எனவும் பிரதம நீதிபதி ஜோன் ரொபர்ட்ஸ் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச்சட்டம் அவசரநிலைகளில் சர்வதேச வர்த்தகத்தை 'ஒழுங்குபடுத்த' ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கினாலும், 'வரி விதிப்பு' குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

சுங்க வரிகள் விதிக்கும் அதிகாரம் அரசமைப்பின்படி காங்கிரஸுக்கே உரியது என்று வரையறுத்தமை மூலம் டிரம்பின் கைகளைக் கட்டிப் போட முயன்றிருக்கின்றது உச்ச நீதிமன்றம்.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு டிரம்பை சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருகின்றது.

ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் தனக்கு எதிராக தீர்ப்பளித்த நீதிபதிகளை கடுமையாக சாடிய டிரம்ப், அவர்களை "தேசத்திற்கு அவமானம்" என்று அழைத்தார்.

மேலும் தமது வரி விதிப்புகள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளமையினால் தாம் அதற்குப் பதிலாக "மிகவும் சக்திவாய்ந்த மாற்றுகளை" நாடுவதற்கு இந்தத் தீர்ப்புத் தன்னைத் துணிச்சலுடன் ஊக்கப்படுத்தியுள்ளதாவும் கூறினார்.

அப்படிப் பார்த்தால், அவர் அடுத்து நடத்தப் போகும் திருவிழா என்ன என்பது தெரியவில்லை. அது இன்னும் மோசமான நிலைமைகளை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.





# இந்தோ - பசுபிக் பிராந்திய பாதுகாப்பில் இறையாண்மைக்கு முன்னுரிமை உறுதி

## அமெரிக்க கடற்படைத் தளபதி இலங்கையில் தெரிவிப்பு

இலங்கைக்கான தனது இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க பசுபிக் கடற்படையின் தளபதி அட்மிரல் ஸ்டீபன் தோமஸ் கோஹ்லர், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவை நேற்று வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்புகள் மற்றும் அண்மைக்கால பாதுகாப்பு அபிவிருத்திகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக மீளாய்வு செய்தனர்.

குறிப்பாக, “டித்வா“ சூறாவளி அனர்த்தத்தின் போது அமெரிக்கா வழங்கிய உடனடி மனிதாபிமான உதவிகளைப் பிரதி அமைச்சர் இதன்போது வெகுவாகப் பாராட்டினார்.

அமெரிக்க விமானப்படையின் 36-வது அவசரக்கால பதிலளிப்பு குழுவின் ஊடாக, இரண்டு ஊ-130து சூப்பர் ஹெர்குலிஸ் விமானங்கள் மற்றும் விமானப்படை வீரர்களைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட வான்வழிப் போக்குவரத்து வசதிகள், இலங்கையின் மீட்புப் பணிகளுக்குப் பெரும் பக்கபலமாக அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய அவசர நிலைகளை ஒரு திருப்புமுனையாகக் கொண்டு, சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து நாட்டை மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக அமெரிக்கா வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்குப் பிரதி அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதன்போது, அமெரிக்காவினால் வழங்கப்பட்ட நான்கு கடலோர பாதுகாப்பு கப்பல்கள், பீச்கிராப்ட் கிங் எயார் விமானம், அதிநவீன “பிளீட் பிராட் பேண்ட்“ (FleetBroadband) செயற்கைக் கோள் தகவல் தொடர்பு அமைப்பு மற்றும் 10 பெல் TH-57 பயிற்சி ஹெலிகள் ஆகியவற்றின் பங்களிப்பை அவர் நினைவு கூர்ந்தார்.

இதற்குப் பதிலளித்த அட்மிரல் கோஹ்லர், இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நான்காவது கடலோர பாதுகாப்பு கப்பல் இன்று சனிக்கிழமை அமெரிக்காவிலிருந்து இலங்கையை நோக்கிப் புறப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.இறுதியாக, இந்தோ -பசுபிக் பிராந்தி யத்தின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் அதன் சவால்களை எதிர்கொள்ளும் போது, நாடுகளின் இறையாண்மையை மதிப்பதே மிக முக்கியமானது என்பது குறித்து இரு தலைவர்களும் கலந்து ரையாடினர்.

நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட அட்மிரல் கோஹ்லர், 2024 ஏப்ரல் 4 அன்று அமெரிக்க பசுபிக் கடற்படையின் தளபதியாகப் பொறுப்பேற்றார். இதற்கு முன்னர் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல முக்கிய சர்வதேச இராணுவ நடவடிக்கைகளில் அவர் தலைமைத்துவம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# எமது கட்சியினராக இருந்தாலும் தயக்கமின்றி கைது செய்யுங்கள்!

## பாதாள உலகத் தொடர்புகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அதிரடி சவால்

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரேனும் பாதாள உலகச் செயற்பாடுகள் அல்லது போதைப்பொருள் வியாபாரத்துடன்தொடர்புடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு எதிராகத் தயக்கமின்றி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவரால் கடந்த மாதம் எழுப்பப்பட்டிருந்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, "பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவர் சம்பந்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அவர்களுக்கு அறிவுறுத்துங்கள்" எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"எமது கட்சி ஒருபோதும் பாதாள உலகச் செயற்பாடுகளுக்குத் துணை போவதோ அல்லது அதனை ஊக்குவிப்பதோ கிடையாது. கொலை, கொள்ளை மற்றும் மோசடி போன்ற எந்தவொரு சட்டவிரோதச் செயல்களையும் நாம் அனுமதிப்பதில்லை அவற்றை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

எனவே, எமது கட்சியைச் சேர்ந்த யாராவது இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பதாகச் சான்றுகள் இருக்குமானால், ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் முழுமையான ஆதரவை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்." – என்று அவர் சபையில் உறுதியளித்தார்.

# இரண்டு பிள்ளைகளின் தாய் கணவரால் வெட்டிக்கொலை!

## குருநாகலில் நள்ளிரவு பயங்கரம்

குருநாகல் மாவட்டம், பன்னலை பிரதேசத்தில் 27 வயதுடைய இளம் குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிப்படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

பன்னலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாகவே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று நள்ளிரவு மதுபோதையில் வீட்டுக்கு வந்த 31 வயதுடைய கணவர், தனது மனைவியுடன் வாக்குவாதத்தில்




ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, ஆத்திரமடைந்த கணவர் கூர்மையான ஆயுதத்தால் மனைவியை வெட்டியுள்ளார்.

பாரிய வெட்டுக் காயங்களுக்குள்ளான அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவத்தின் பின்னர் சந்தேகநபரான கணவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய சந்தேகநபரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசேட விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.




# மஹிந்தவின் அதிரடியான முடிவே புலிகளிடமிருந்து நாட்டை மீட்டது!

**பொன்சேகாவின் போர்க்காலக் குற்றச்சாட்டுகளை நிராகரித்தது மொட்டுக் கட்சி**

"நாட்டின் தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ஷ எடுத்த அதிரடியான முடிவுகளாலேயே நாடு புலிப் பயங்கர வாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தற்போதைய கருத் துக்கள் அரசியல் ரீதியான விரக்தியின் வெளிப்பாடே." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகா மக்களுக்காக அரசியல் செய்பவர் அல்லர் என்றும், அவர் தனிப்பட்ட பகைமையைத் தீர்க் கும் அரசியலையே முன்னெடுத்து வரு கின்றார் என்றும் அக்கட்சி சாடியுள்ளது.

இறுதிப் போரின் போது விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாய்ப்பளித்ததாக சரத் பொன்சேகா அண்மையில் குற்றச்சாட்டு ஒன்றினை முன்வைத்திருந்தார். மூன்றாம் தரப்பிடம் சரணடைவதே விடுதலைப் புலிகளின் கோரிக்கையாக இருந்த போதிலும், இராணுவத்திடம் சரணடையு மாறு அறிவுறுத்தப்பட்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக் குக் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி யாராச்சி தெரிவித்ததாவது:-

"யுத்தம் நிறைவடையும் போது இராணுவத் தளபதியாக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே சரத் பொன்சேகாவை நாம் மதிக்கின் றோம். அதனைத் தாண்டி அரசியல் ரீதியாக அவர் ஒரு பெறுமதியற்ற நபர். அவர் மக்களின் நலனுக்காக அரசியல் செய்யாமல், தனது தனிப்பட்ட கோபங் களையும் பகைமைகளையும் தீர்த்துக் கொள்வதற்காகவே அரசியலைப் பயன் படுத்துகின்றார்.

சரத் பொன்சேகாவின் குற்றச்சாட் டுகளுக்குப் பதில் யுத்த வெற்றியின் பெருமையைக் குறைக்கும் வகை யிலான இத்தகைய கருத்துக்களைக் கணக்கில் கொள்ளத் தேவையில்லை. நாட்டின் தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ஷ எடுத்த அதிரடியான முடிவுகளாலேயே நாடு புலிப் பயங்கர வாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. சரத் பொன்சேகாவின் தற்போதைய கருத்துக்கள் அரசியல் ரீதியான விரக் தியின் வெளிப்பாடே." – என்றார்.

# மினுவாங்கொடை, மஹியங்கனையில் மின்சாரம் தாக்கி இருவர் பரிதாபப் பலி!

நாட்டின் இரு வேறு பகுதிகளில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒரு வரும், குடும்பஸ்தர் ஒருவரும் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**மினுவாங்கொடையில் இளைஞர் உயிரிழப்பு**

கம்பஹா மாவட்டம், மினுவாங் கொடைப் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற மின்சார விபத்தில் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீரிகமை பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞர், வீடொன்றில் மின்குமிழ் களைப் பொருத்திக் கொண்டிருந்த போதே எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று



ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**மஹியங்கனையில் குடும்பஸ்தர் மரணம்**

இதேவேளை, பதுளை மாவட்டம், மஹியங்கனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கி 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாப்பாகடவெவ பகுதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர், காணி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் அமைக் கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியமே இந்த மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**சந்தேகநபர் கைது**

இந்தச் சட்டவிரோத மின்சார இணைப்பை ஏற்படுத்தினார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அந்தந்தப் பகுதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பழிவாங்கும் அரசியலை விடுத்து மக்கள் நலனில் அக்கறை காட்டுக!

## பிணையில் வந்த அனுஷ பல்பிட்ட காட்டம்



இந்த அரசு மக்கள் நலனில் அக்கறை காட்டுவதை விடுத்து, முன்னாள் ஆட்சியாளர்களையும், அரச அதிகாரிகளையும் பழிவாங்கும் அரசியலையே முன்னெடுத்து வருகின்றது என ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளரும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான அனுஷ பல்பிட்ட தெரிவித்தார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனுஷ பல்பிட்டவைக் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுத்துள்ளது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தற்போதைய அரச நிர்வாகத்தில் எவ்விதமான திட்டமிடலும் இல்லை. அனுபவம் வாய்ந்த அரச அதிகாரிகளை இலக்கு வைத்து, அவர்களுக்கு எதிராகச் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாகக் கட்டமைப்பையும் அரசு சீர்குலைத்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக நேர்மையான அதிகாரிகள் அச்சத்துடன் பணியாற்றும் சூழலே நிலவுகின்றது.

எனக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. சட்டத்தின் மீதும் நீதிமன்றத்தின் மீதும் எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. ஆனால், அரசியல் காரணங்களுக்காக எம்மைப் போன்ற அதிகாரிகளை நீதிமன்றக் கூண்டில் ஏற்றுவது கவலைக்குரிய விடயமாகும்.

பழைய சம்பவங்களைக் கிளறிப் பார்ப்பதை விடுத்து, தற்போதைய பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வேலைத் திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும். பழிவாங்கும் அரசியலால் நாட்டை முன்னேற்ற முடியாது." - என்றார்.



# பஸ்ஸை முந்த முயன்ற கார் மோதி பச்சிளம் சிறுமி பரிதாப உயிரிழப்பு!

## கம்பளையில் சோகம்

கம்பளை – நாவலப்பிட்டி பிரதான வீதியின் நாகொல்ல பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று வயது சிறுமியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கம்பளை நோக்கிப் பயணித்த கார் ஒன்று, முன்னால் சென்ற பஸ்ஸை முந்திச் செல்ல முயன்றுள்ளது. இதன் போது, எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் அந்தக் கார் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் பலத்த காயமடைந்த நிலையில், உடனடியாக கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி 3 வயதுடைய பெண் குழந்தை உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் காரின் ஓட்டுநரை எத்கால பொலிஸார் கைது செய்துள்ளனர். அஜாக்கிரதையாக வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை எத்கால பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ். பல்கலையின் 40 ஆவது பட்டமளிப்பு விழா: இன்று வெகுவிமரிசையாக 3 ஆம் நாள் அமர்வுகள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் அமர்வுகள் இன்று சனிக்கிழமை வெகுவிமரிசையாக நடைபெற்றன.

கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் பட்டமளிப்பு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ச்சியாக நான்கு நாள்களாக நடைபெறுகின்றது.

மொத்தம் 12 அமர்வுகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த விழாவில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த 3 அயிரத்து 252 மாணவர்கள் பட்டங்களையும், தகைமைச்சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வேந்தர் தகைசால் பேராசிரியர் இ.குமாரவடிவேலின் தலைமையில் இந்த அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீடங்களைச் சேர்ந்த உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்படுகின்றனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதி நாள் அமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



















# ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் லொறி பள்ளத்தில் விழுந்து விபத்து

ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு லொறி இன்று அதிகாலை 2.30 மணியளவில் வட்டவளை பகுதியில் சுமார் 15 அடி ஆழமுள்ள பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

எதிரே வந்த வாகனத்திற்கு வழி விட முயன்றபோதுலொறி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து ஏற்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் லொறி பலத்த சேதமடைந்துள்ளது. அதன் சாரதி வாகனத்திற்குள் சிக்கிக் கொண்டார். அவரை மீட்க வட்டவளை பொலிஸார் மற்றும் உள்ளூர் மக்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் முயற்சி மேற்கொண்டனர்.

மீட்கப்பட்ட சாரதி 1990 சுவசேரிய நோயாளர்காவுவண்டி சேவையால் வட்டவளை பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த நேரத்தில் வாகனத்தில் சாரதியும் அவரது உதவியாளரும் மட்டுமே இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# நாட்டின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு மண்சரிவு ஆரம்பக்கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, நுவரெலியா மாவட்டம் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய பகுதிகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பதுளை மாவட்டத்தின் மீகாககிவுல மற்றும் கந்தகெட்டிய ஆகிய பகுதிகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத்த மற்றும் மதுரட்ட ஆகிய பகுதிகளுக்கும் முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவித்தலானது இன்று காலை 08.00 மணி முதல் நாளை காலை 08.00 மணி வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் வாழும் மக்கள் நிலவெடிப்பு, மரங்கள் சாய்ந்து விழுதல் மற்றும் திடீர் நீர் ஊற்றுக்கள் தோன்றுதல் போன்ற மண்சரிவு அறிகுறிகள் தென்படின், உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# ஊடக அடையாள அட்டைகளின் விநியோகத்தில் கட்டுப்பாடுகள்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் இதுவரை காலமும் முறைசாரா முறையில் வழங்கப்பட்டு வந்த ஊடக அடையாள அட்டைகளை இனிவரும் காலங்களில் மிகவும் விதிகளுக்கு உட்பட்டு, முறையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் சுமார் 8,100 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், தகுதியானவர்களைத் தெரிவு செய்வதன் மூலம் இந்த எண்ணிக்கையை 5,000 வரை குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு (2026), 877 பிரதேச ஊடகவியலாளர்கள் உட்பட சுமார் 4,700 ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே புதிய அடையாள அட்டைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய அரசு நிறுவனங்களின் ஊடகப் பிரிவினரையும் சேர்த்தால் இது 5,000 ஐ எட்டும்.




அடையாள அட்டைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பது தகுதியானவர்களைப் புறக்கணிப்பதல்ல, மாறாகத் தகுதியற்றவர்களுக்குச் சென்றடைவதைத் தடுப்பதற்கே என அவர் விளக்கமளித்தார்.

அரச மற்றும் தனியார் ஊடகவியலாளர்களுக்குப் பாகுபாடின்றி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட புலமைப்பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுவரை காலமும் தகவல் திணைக்களத்தின் சில அதிகாரிகள் மட்டுமே வெளிநாட்டுப் பயணங்களில் பங்கேற்று வந்த நிலையை மாற்றி, இனிவரும் காலங்களில் ஊடகவியலாளர்களுக்கும் அந்த வாய்ப்புகள் முறைப்படி பகிர்ந்தளிக்கப்படும் என அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார தெரிவித்துள்ளார்.


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
MEDIA NETWORK
MURASU
digital
tamil one

## தரம் 6 பாடப்புத்தக சர்ச்சை:

# சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்ய கங்கொடவில நீதவான் நீதிமன்றம் உத்தரவு




புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 6 ஆம் தர ஆங்கிலப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியில், மாணவர்களுக்குப் பொருத்தமற்ற இணையதள முகவரி சேர்க்கப்பட்டமை தொடர்பான வழக்கை விசாரித்த கங்கொடவில நீதவான் நீதிமன்றம், இது குறித்த விசாரணைகளை விரைவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

கங்கொடவில நீதவான் ருவன்திகா மாரசிங்க நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு பணிப்புரை வழங்கினார்.

தரம் 6 மாணவர்களுக்கான புதிய ஆங்கிலப் பாடத் தொகுப்பில், ஒரு பாடத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருந்த “கியூஆர்” குறியீடு அல்லது இணையதள இணைப்பு, ஆபாசமான அல்லது தகுதியற்ற உள்ளடக்கங்களைக் கொண்ட இணையதளத்திற்கு இட்டுச் செல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், அச்சு மற்றும் பாடத்திட்டத் தயாரிப்பில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன.





# விவசாயிகள் நலன் கருதி தோணா வெட்டும் பணி

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட அடை மழையினால் தேங்கியிருந்த வெள்ளநீர் விவசாய நிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய நிலையில், விவசாயிகள் நலனை முன்னிறுத்தி காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் சு. பாஸ்கரன் தலைமையில் இன்று சனிக்கிழமை தோணா வெட்டும் பணி முன்னெடுக்கப்பட்டது.

வெள்ளநீர் வடிந்தோடாத காரணத்தால் பல ஏக்கர் பயிரிடப்பட்ட நிலங்கள் நீரில் மூழ்கியிருந்தன என விவசாயிகள் தெரிவித்திருந்தனர். இதனால் பயிர் சேதம் ஏற்படும் அபாயம் நிலவியதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலைமையை கருத்தில் கொண்டு, அவசர நடவடிக்கையாக தோணா வெட்டப்பட்டது.

இதன் மூலம் தேங்கியிருந்த வெள்ளநீர் விரைவாக வெளியேறி, வயல்வெளிகளில் நீர் தேக்கம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் உள்ளூர் விவசாயிகள் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.












# மகாவலி கங்கையின் நீர்மட்டம் உயர்ந்தது

## சில வீதிகள் மூடப்பட்டன

மகாவலி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், சுங்காவில, லங்காபுரவிலிருந்து சோமாவதிய வரையிலான வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை 09.15 முதல் இலகுரக வாகனப் போக்குவரத்திற்கு இந்த வீதி மூடப்படும் என்று பொலன்னறுவை அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வளிமண்டலவியல் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சபரகமுவ மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும்.

நாட்டின் ஏனைய சில பகுதிகளில் 75 மில்லி மீற்றருக்கு அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வெற்றிலையை மென்று உமிழ்ந்தவருக்கு பருத்தித்துறை நீதவானால் கடும் எச்சரிக்கை



பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட நகர்ப்புறத்தின் வீதியில் பொதுமக்களிற்கு தொல்லையை ஏற்படுத்தும் முகமாக வெற்றிலையை மென்று உமிழ்ந்த நபர் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் பருத்தித்துறை நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் நேரடியாக அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில், நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் அவரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கை விசாரித்த நீதவான் இந்துஜா சிவலிங்கம், கடுமையாக எச்சரிக்கை செய்து மேற்படி நபரை விடுவித்திருந்தார்.

# பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டதீர்மானத்தை வர்த்தமானியில் வெளியிடவேண்டிய தேவை கிடையாது

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு



"பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் எவ்வித சட்ட சிக்கலும் இல்லை. வரவு – செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு தீர்மானத்தை மீண்டும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டிய தேவை கிடையாது."

– இவ்வாறு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பெருந்தோட்ட அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயம் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் தவறாக பகிரப்பட்டு வருகிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் சட்ட ரீதியான சிக்கல் காணப்படுவதாக தவறான தகவல்கள் பகிரப்படுகின்றன. இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர் மத்தியிலும் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றி குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பில் சட்ட ரீதியான சிக்கல் இருப்பதாக காண்பிக்க முயற்சித்தனர். அது மாத்திரமின்றி, தாம் சம்பள அதிகரிப்பை எதிர்க்கவில்லை எனக் கூறி ஆனால் அதற்கு தடையை ஏற்படுத்தும் வகையிலேயே அவரது கேள்விகள் அமைந்திருந்தன.

இதில் எவ்வித சட்ட சிக்கலும் இல்லை. எனவே அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்படும். மலையக தமிழ் மக்கள் இன்றும் தமக்கான பல்வேறு உரிமைகளை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே அவர்களுக்கான உரிமைகளை நாம் உறுதிப்படுத்துவோம் என எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதியை தற்போது நிறைவேற்றியிருக்கின்றோம்.

வரவு – செலவு திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்கி, அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியிருக்கின்றோம். முற்றுமுழுதான நிதி அதிகாரத்தைக் கொண்ட நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் எந்தவகையிலும் சட்ட சிக்கல் கொண்டதாக இருக்காது. அரசாங்க நிதி பற்றிய குழுத் தலைவருக்கு இதை நினைவபடுத்துகின்றோம். அது மாத்திரமின்றி தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புடன் நேரடி தொடர்பினைக் கொண்ட தரப்பினருடன் எழுத்துபூர்வ இணக்கப்பாட்டையும் எட்டியுள்ளோம்.

அத்தோடு இந்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மற்றொரு அமைச்சரவை பத்திரமும் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை வீதிக்கு இறக்காமல் இம்முறை அவர்களுக்கான சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் இதனை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுமாறு ஒரு தரப்பு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

உண்மையில் அவ்வாறு இதனை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டிய தேவை இல்லை. விவசாயிகளுக்கு உர நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால் அதற்கான தீர்மானங்கள் எவையும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை. எனவே வர்த்தமானியில் வெளியிட வேண்டிய சட்டத் தேவை இதில் வலியுறுத்தப்படவில்லை. தொழில் சட்டத்தின் கீழ் தொழில் அமைச்சுடன் இணைந்த தொழிலாளர்களுக்கே இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது.

இது தொடர்பில் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு இணக்கப்பாட்டில் எவ்வித தொழிநுட்ப சிக்கலும் இல்லை. 78 014 பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த 10ஆம் திகதி அதிகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இனிவரும் மாதங்களிலும் அவ்வாறு வழங்கப்படும்."– என்றார்.

# காலாவதியான உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தியவர்களுக்கு தண்டம்




காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வெதுப்பகம் மற்றும் பல்பொருள் அங்காடி என்பவற்றின் உரிமையாளர்களுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட வெதுப்பகம் ஒன்றிலும் பல்பொருள் அங்காடி ஒன்றிலும் காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை விசேட சோதனை நடவடிக்கையின் போது உறுதிசெய்யப்பட்டது.

இது தொடர்பில் மேற்படி உரிமையாளர்களிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதவான் இந்துஜா சிவலிங்கம் எச்சரிக்கையுடன் முறையே 40,000 ரூபா, 30,000 ரூபா தண்டப்பணம் விதித்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டில்லி செங்கோட்டைக்கு அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்த சதி

## உளவுத் துறை எச்சரிக்கை




இந்திய தலைநகர் டில்லியில் செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சாந்தினி சௌக் பகுதியில் உள்ள ஒரு கோயிலை பயங்கரவாதிகள் குறிவைக்கலாம் எனவும் உளவுத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டையை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் சாந்தினி சௌக்கின் சில பகுதிகள் உட்பட முக்கிய கோயில்கள் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பா கண்காணிப்பில் இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

சாந்தினி சௌக்கில் உள்ள ஒரு கோயிலை இலக்காகக் கொண்டு, அந்த பயங்கரவாத அமைப்பு வெடிகுண்டு தாக்குதலை திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பெப்ரவரி 6 ஆம் திகதி நடந்த குண்டுவெடிப்புக்குப் பழிவாங்க லஷ்கர்-இ-தொய்பா முயற்சிப்பதாகவும், இந்தியாவில் ஒரு பெரிய தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய கோயில்கள் லஷ்கர்-இ-தொய்பாவின் கண்காணிப்பில் உள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் 10 அன்று டில்லியில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க செங்கோட்டைக்கு அருகில் நடந்த ஒரு பயங்கரமான கார் குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண் 1-க்கு அருகில் வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்ட ஒரு கார் வெடித்ததில் அருகிலுள்ள பல வாகனங்கள் வெடித்து சிதறின என்பது குறிப்பிடத்தக்கது.




# கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கு 7 பேர் கொண்ட குழுவை அமைத்தது தி.மு.க

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த 7 பேர் கொண்ட குழுவை தி.மு.க. தலைமை அமைத்துள்ளது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடக்கவிருக்கிறது. இதன் காரணமாக அரசியல் கட்சிகளின் கூட்டணி பேச்சுவார்த்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், தி.மு.க. சார்பில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த டி.ஆர்.பாலு தலைமையில் 7 பேர் குழுவை அக்கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் அமைத்துள்ளார்.

குழு உறுப்பினர்கள் : கே.என். நேரு (முதன்மைச் செயலாளர் தி.மு.க)

திருச்சி சிவா (துணைப் பொதுச் செயலாளர் தி.மு.க)

ஆ.இராசா (துணைப் பொதுச்செயலாளர் தி.மு.க)

ஆர்.எஸ்.பாரதி (தி.மு.க. அமைப்புச் செயலாளர்)

எ.வ. வேலு (தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்)

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் (தி.மு.க. உயர்நிலை செயத்திட்டக்குழு உறுப்பினர்)



# அமெரிக்கா தலைமையில் ‘பாக்ஸ் சிலிக்கா’ கூட்டமைப்பில் இணைந்தது இந்திய அரசு

இந்தியா ஏ.ஐ. தாக்க உச்சி மாநாட்டில், அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா கூட்டமைப்பில் இந்தியா முறைப்படி இணைந்தது. இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.

குறைக்கடத்தி உற்பத்தி முதல் செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பு வரை சிலிக்கான் அடுக்கைப் பாதுகாப்பதில் உறுதிபூண்டுள்ள நம்பகமான நாடுகளின் கூட்டமைப்பாக ‘பாக்ஸ் சிலிக்கா’ கருதப்படுகிறது. அமெரிக்கா தலைமையிலான இந்த கூட்டமைப்பு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் வெளிப்படையானதாகவும், ஜனநாயக சமூகங்களால் நிர்வகிக்கப்படுவதாகவும் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த கூட்டமைப்பில் இந்தியா நேற்று முறைப்படி இணைந்தது. டில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டில் இந்திய தகவல் தொடர்பு துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், அமெரிக்க பொருளாதார வளர்ச்சி, எரிசக்தி, சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் ஜேக்கப் ஹெல்பெர்க், இந்தியாவுக்கான அமெ ரிக்க தூதர் செர்ஜியோ கோர் உள்ளிட்டோர் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத் திட்டது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய அஸ்வினி வைஷ்ணவ்,

“செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஒரு உச்சி மாநாட்டை மட்டும் நாங்கள் நடத்தவில்லை. எதிர்காலத்தை நாங்கள் கட்டமைக்கிறோம். இளைய தலைமுறையினருக்கு புதிய அடித்தளங்களும் புதிய வாய்ப்புகளும் உருவாக்கப்படுகின்றன. 1947 முதல் இந்தியாவின் வளர்ச்சியைப் பார்த்தால், கூட்டு வளர்ச்சியின் தாக்கத்தை நாம் அனைவரும் உணரலாம். இன்று இந்தியாவின் திறமையான பொறியாளர்கள் உலகின் மிகவும் மேம்பட்ட இரண்டு நானோ மீட்டர் சில்லுகளை வடிவமைக்கிறார்கள். குறைக்கடத்தி தொழிலுக்கு சுமார் 10 லட்சம் புதிய நிபுணர்கள் தேவைப்படும். இது இந்தியாவுக்கு மிகப் பெரிய வாய்ப்பு.” என தெரிவித்தார்.

# மக்களிடம் சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தை உடன் திருப்பிச் செலுத்துங்கள்

## ட்ரம்ப்பை விமர்சித்தார் கலிபோர்னியா ஆளுநர்





அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை விமர்சித்துள்ள கலிபோர்னியா ஆளுநர் கசின் நியூசம், பொதுமக்களிடம் சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தை உடனடியாகத் திருப்பிச் செலுத்துமாறு வலியுறுத்தியுள்ளார்.

“ட்ரம்ப்பினால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளே அவரது வரி விதிப்பு சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இது அமெரிக்க குடும்பங்களுக்கும் சிறு வணிகங்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி.

ட்ரம்ப் உடனடியாக வட்டியுடன் அந்தப் பணத்தை அமெரிக்கர்களுக்குத் திருப்பி வழங்க வேண்டும்.” என அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட சினேற்றர் எலிசபெத் வாரன் குறிப்பிடுகையில்,

“நீதிமன்றத் தீர்ப்பு மட்டும் ட்ரம்ப்பின் வரிகளால் ஏற்பட்ட பாரிய சேதத்தை ஈடுசெய்யப் போதாது. நுகர்வோருக்குச் சொந்தமான ஒவ்வொரு டொலரும் திருப்பி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.” என்றார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப், பணத்தைத் திருப்பிச் செலுத்தும் எண்ணம் தமக்கில்லை என்பதை சூசகமாகத் தெரிவித்தார். அத்துடன், இந்த விவகாரம் பல வருடங்களுக்கு நீதிமன்ற வழக்குகளில் சிக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் சட்டவிரோதமாக சுமார் 130 - 150 பில்லியன் டொலர் வரை வரிப்பணத்தை வசூலித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது சராசரியாக ஒரு அமெரிக்க குடும்பத்திற்கு ஆண்டுக்கு 1,750 டொலர் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக யேல் பல்கலைக்கழக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



# அனைத்து நாடுகளுக்கும் 10 வீதம் இறக்குமதி வரி

## டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்னர் அவசர அதிகாரங்களின் கீழ் அமல்படுத்திய தங்கள் வரி நடைமுறையை உச்சநீதிமன்றம் ரத்து செய்ததற்குப் பின்னர், பெரும்பாலான நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வரும் பொருள்களுக்கு 10வீத 'தற்காலிக இறக்குமதி வரி' விதிக்கும் அறிவிப்பை கையெழுத்திட்டு அமல்படுத்தியுள்ளார்.

வெள்ளை மாளிகை வெளியிட்ட தகவலின் படி, புதிய வரி பெப்ரவரி 24 ஆம் திகதி அமலுக்கு வரும்.

இந்த நடவடிக்கை 'அடிப்படை சர்வதேச கட்டணப் பிரச்சனைகள்' தீர்வை நோக்கி எடுக்கப்பட்டதாகவும், 1974 வர்த்தக சட்டத்தின் 122 ஆவது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று உச்சநீதிமன்றம் தீர்ப்பில் 6-3 வாக்குகள் விகிதத்தில் ட்ரம்ப் அவசர அதிகாரச் சட்டத்தின் கீழ் பரவலான வரிகளை விதித்தமைக்கு தனது அதிகாரத்தை மீறியுள்ளார் என அறிவித்தது.

# நைஜீரியாவில் துப்பாக்கி சூடு: பலி எண்ணிக்கை அதிகரிப்பு



நைஜீரியாவின் வடமேற்கு மாநிலமான ஸம்பாராவில் உள்ள கிராமம் ஒன்றின் மீது இரவு வேளை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கி சூடு ஸம்பாராவின் புக்கூயும் பகுதியில் உள்ள தங்கன் துட்ஷா கிராமத்தில் வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை காலை வரை நீடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதமேந்திய நபர்கள், அப்பகுதியிலுள்ள கட்டடங்களுக்குத் தீ வைத்ததுடன் குடியிருப்பாளர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்த தகவல்கள் தெளிவாகத் தெரியவில்லை என்றும், காணாமல் போனவர்களின் பட்டியலை அந்நாட்டு அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ஆயுதமேந்திய கும்பல்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த வாரம், நைஜர் மாநிலத்தின் போர்கு பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 46 பேர் கொல்லப்பட்டனர்.

கொன்கோசோ கிராமத்தில் இடம்பெற்ற மிக மோசமான தாக்குதலில் 38 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் கழுத்தறுத்து படுகொலை செய்யப்பட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
சனிக்கிழமை | 21/02/2026

**கனடாவின் ஒட்டாவாவில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் ஒருவர் மரணம்**




02




# கியூபாவிலிருந்து வெளியேறின கனடாவின் இறுதி விமானங்கள்

## இதுவரை 28,000 சுற்றுலாப் பயணிகள் நாடு திரும்பினர்

கியூபாவில் நிலவும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, கனேடிய விமான நிறுவனங்களின் கடைசி விமானங்களும் அந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளன என கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கியூபாவிலிருந்து இதுவரை சுமார் 27,900 இற்கும் மேற்பட்ட கனேடியப் பயணிகள் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கியூபாவில் நிலவும் எரிபொருள், மின்சாரம், உணவு மற்றும் மருந்து தட்டுப்பாடுகள் காரணமாக, அந்நாட்டிற்கான அவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு கனடா தனது குடிமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. 02


# கனடா மீது நீடிக்கின்றன அமெரிக்காவின் வரிகள்!

## ரத்தானது ஒரு பகுதி மட்டுமே



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரிகளை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ள போதிலும், இது கனேடிய தொழிலாளர்களுக்குக் கிடைத்த முழுமையான வெற்றி அல்ல என கனடாவின் மிகப்பெரிய தனியார் துறை தொழிற்சங்கமான Unifor தெரிவித்துள்ளது.

"இந்தத் தீர்ப்பு ட்ரம்ப்பின் வரிகள் சட்ட விரோதமானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், கனேடிய தொழிலாளர்கள் இதனை வெற்றியாகக் கருதக்கூடாது." என Unifor தேசியத் தலைவர் லானா 02




# கனடாவின் ஒட்டாவாவில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் ஒருவர் மரணம்

கனடாவின் ஒட்டாவாவில் இடம் பெற்ற கத்திக் குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரைடியு நிலைய வணிக வளாகத் துக்கு அருகில் இந்த சம்பவம் நடை பெற்றதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொலைப்பிரிவு விசாரணையை முன்னெடுத்து வருகிறது.

காயமடைந்த மேற்படி நபர் உயி ருக்கு ஆபத்தான நிலையில் மருத்து வமனைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார். பின்னர் அவர் உயிரிழந் தார் என பொலிஸார் உறுதிப்படுத் தினர்.

உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை. பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்தவித அச்சமும் இல்லை எனவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டின் நான்காவது கொலைச் சம்பவமாக இது பதிவா கியுள்ளது.

கடந்த ஐந்து நாள்களில் Rideau Centre அருகே இடம்பெற்ற இரண்டா வது கத்தி குத்தி சம்பவமாகவும் இது குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, அதே பகுதியில் மேலும் ஒருவர் கத்தி குத்துக்கு இலக்காகி காயமடைந்தி ருந்தார்.






## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெய்ன் தெரிவித்துள்ளார்.

வாகன உற்பத்தி, உருக்கு, அலுமினி யம் மற்றும் மரப் பொருள்கள் மீது 'தேசிய பாதுகாப்பு' (Section 232) என்ற போர்வையில் விதிக்கப்பட்டுள்ள வரி கள் இப்போதும் அமுலில் உள்ளன. இவை எப்போது வேண்டுமானாலும் விரிவுபடுத்தப்படலாம்.

IEEPA (சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டம்) வரிகள் நீக்கப்பட்டா லும், அமெரிக்க அதிகாரிகள் மாற்றுச் சட்டங்களைப் பயன்படுத்தி மீண்டும் வரிகளை விதிக்கத் தயாராகி வருவதாக தொழிற்சங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

மென்மரங்கள் மீதான நீண்டகால எதிர்ப்பு வரி விவகாரத்திலும் இந்தத் தீர்ப்பு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை.

தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு வெறும் நீதிமன்றத் தீர்ப்புகளை மட்டும் நம்பியிருக்காமல், கனடா தனது சொந்த தொழில்துறை கொள்கைகளை வலுப் படுத்த வேண்டும் என்றும், உள்நாட்டு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் லானா பெய்ன் வலியுறுத்தி யுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கியூபாவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏயார் கனடா, வெஸ்ட்ஜெட் மற்றும் ஏயார் ட்ரான்சாட் ஆகிய முக்கிய நிறு வனங்கள் கியூபாவிற்கான தமது சேவைகளை காலவரையறையின்றி நிறுத்தியுள்ளன.

கியூப விமான நிலையங்களில் எரிபொருள் கிடைப்பதில் உள்ள நிச்ச யமற்ற தன்மையே இதற்குக் காரண மாகும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கியூபாவிற்கு எரிபொருள் வழங்கும் நாடுகளுக்கு எதிராக வரி களை விதிப்பதாக அச்சுறுத்தியுள்ளமை, இந்த நெருக்கடியைத் தீவிரப்படுத்தி யுள்ளது.

ஜனவரி மாத தொடக்கத்தில் வெனி சுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவினால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கியூபா விற்கான எண்ணெய் விநியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கியூபாவில் இன்னும் சுமார் 7,000 க்கும் மேற்பட்ட கனேடியர்கள் இருக்கக் கூடும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

கனேடிய விமானங்கள் சேவையை நிறுத்தியுள்ள போதிலும், ஏனைய சர் வதேச விமான நிறுவனங்கள் மூலம் வணிக ரீதியான சில விமானங்கள் இன்னும் இயங்கி வருகின்றன என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.



# அமெரிக்க நீதிமன்றத் தீர்ப்பு நியாயமானது: வரி தொடர்பான சவால்கள் தொடர்கின்றன

அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, ட்ரம்ப் விதித்திருந்த வரிகள் நியாயமற்றவை என்பதை உறுதிப் படுத்தியுள்ளதாக கனேடிய சர்வதேச வர்த்தக அமைச்சர் டொமினிக் லெப் லான் தெரிவித்துள்ளார்.

எனினும், கனடாவுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் சில வரிகள் இன்னும் நீடிக்கின்றமை குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயர் நீதிமன்றத் தீர்ப்பு அவசர கால அதிகாரங்களின் கீழ் விதிக்கப் பட்ட வரிகளை மட்டுமே ரத்து செய் துள்ளது. ஆனால், 'தேசிய பாதுகாப்பு' (Section 232) சட்டத்தின் கீழ் உருக்கு மற்றும் அலுமினியம் மீது விதிக்கப் பட்டுள்ள 25 வீத வரிகள் இன்னும் அமுலில் உள்ளன.

கடந்த ஆண்டு கனேடிய சிற்றூந்து கள் மற்றும் உதிரிபாகங்கள் மீது விதிக்கப்பட்ட 25 வீத வரி கனேடிய வாகன உற்பத்தித் துறையை கடுமை யாகப் பாதித்துள்ளது.

கனடாவில் உற்பத்தியாகும் வாக னங்களில் சுமார் 90 வீதம் அமெரிக்கா விற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க கனேடிய பிரதமர் மார்க் கார்னி, வாகன உற்பத்தியாளர்களுக்கு நிதியு தவி வழங்குவதற்கும், மின்சார வாக னங்களுக்கான மானியங்களை மீண் டும் அறிமுகப்படுத்துவதற்கும் புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்.

இந்த வரிகள் நீடிக்கின்ற போதி லும், எல்லைகளுக்கு அப்பால் இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ச்சி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க வொஷிங்டனுடன் இணைந்து செயற்பட கனடா தயாராக இருக்கிறது." என்று தெரிவித்துள்ளார்.







# அமெரிக்கா பயணம் மேற்கொள்ளும் பழங்குடியின மக்களுக்கு அறிவுறுத்தல்

அமெரிக்கா பயணம் மேற்கொள் ளும் கனடிய பழங்குடியினருக்கு, கனடிய மத்திய அரசு புதிய பயண அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

எல்லை கடக்கும் போது 'Status Card' மட்டும் போதுமானதாக இருக் காது. அதனுடன் செல்லுபடியாகும் கடவுச்சீட்டை எடுத்துச்செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிலம் அல்லது நீர்வழியாக கனடா-அமெரிக்க எல்லையை கடக்கும் போது 'Secure Certificate of Indian Status' பயன்படுத்த முடியும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

கனடிய அரசாங்கம் தனது அதி காரப்பூர்வ இணையதளத்தில் வெளி யிட்டுள்ள புதுப்பிப்பின் படி இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த அட்டையை ஏற்க வேண்டுமா என்பது முழுமையாக அமெரிக்க அதிகாரிகளின் விருப்பத் தீர்மானம் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும், Status Card அல்லது Secure Status Card ஆகியவை விமானப் பயணத்திற்கான செல்லுபடியாகும் பயண ஆவணங்களாக ஏற்கப்பட மாட்டாது என்றும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

எனவே, எல்லை கடக்கும் அனை வரும் இயந்திரம் வாசிக்கக்கூடிய (machine-readable) Secure Status Card உடன் செல்லுபடியாகும் கடவுச்சீட்டை எடுத்துச் செல்ல வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக Secure Status Card மட்டும் கொண்டு எல்லையை கடந்திருக்க லாம்; ஆனால் இப்போது கனடா வெளியே பயணம் செய்யும் போது கடவுச்சீட்டு எடுத்துச்செல்ல வலியு றுத்தப்படுகிறது என அறிவுறுத் தப்பட்டுள்ளது.